● எஸ்.மகேஷ் ● படம்: வி.ஸ்ரீனிவாசலு



## அரசியல் செய்கிறார்களா அதிகாரிகள்..?

# சர்ச்சையில் பொறுப்பு டி.ஜி.பி நியமனம்!

தமிழக காவல்துறை படைத் தலைவராக (பொறுப்பு டி.ஜி.பி) நியமிக்கப்பட்டிருக்கிறார், 1994 பேட்ச் ஐ.பி.எஸ் அதிகாரியான வெங்கடராமன். அவரின் நியமனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, 'மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு' உச்ச நீதிமன்றத்தை நாடியிருக்கும் நிலையில், "காவல்துறை படைத்தலைவர் நியமனம் தொடர்பாக, உச்ச நீதிமன்றம் பல்வேறு வழிகாட்டுதல்களை வழங்கியிருக்கிறது. அதையெல்லாம் தமிழக அரசு பின்பற்றவில்லை..." எனப் பொருமுகிறார்கள் காவல்துறையில் பணியாற்றும் சீனியர் காக்கிகள். "தமிழக காவல்துறையை வழிநடத்தப்போகும் ஒருவரின் நியமனம், இந்த அளவுக்குச் சர்ச்சையானது ஏன்..?" என விசாரித்தோம்!

டி.ஜி.பி அந்தஸ்திலான அதிகாரிகள், பல்வேறு பொறுப்புகளில் பணியமர்த்தப்படுவது உண்டு. அதில், காவல்துறை படைத்தலைவர் பதவி என்பது மிக முக்கியமான பணி. காவல்துறைக்கே அந்தப் பதவிதான் பொறுப்பு என்பதோடு, அதிகாரம் மிக்க சட்டம்-ஒழுங்கு டி.ஜி.பி பொறுப்பையும் ஏற்று நடத்த வேண்டுமென்பதால், அந்தப் பதவிக்கு வருவது என்பது, ஐ.பி.எஸ் அதிகாரிகளின் கனவு. பெரும்பாலும், அந்தப் பதவிக்கு ஆளுங்கட்சிக்கு வேண்டப்பட்ட ஐ.பி.எஸ் அதிகாரிகளே நியமிக்கப்படுவது வழக்கம்.

பிரகாஷ் சிங் வழக்கில் உச்ச நீதிம்ன்றம் வழங்கியிருக்கும் வழிகாட்டுதலின்படி, பணி மூப்பு, சேவை பதிவு, அனுபவ வரம்பு ஆகியவற்றின் அடிப்படையில், சீனியர் டி.ஜி.பி-க்களின் பட்டியலை மத்திய அரசின் யூ.பி.எஸ்.சி-க்கு ஒவ்வொரு மாநிலமும் அனுப்ப வேண்டும். சிட்டிங் சட்டம்-ஒழுங்கு டி.ஜி.பி ஓய்வு பெறப்போகும் நாளுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பே, அந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அனுபப்பட வேண்டும். அதிலிருந்து சீனியர்கள் மூன்று பேரைத் தேர்வுசெய்து, மாநில அரசுக்கு மத்திய அரசு அனுப்பும். அநத மூன்று பேரிலிருந்து ஒருவரை, சட்டம்-ஒழுங்கு டி.ஜி.பி-யாக மாநில அரசு தேர்வு செய்துகொள்வது நடைமுறை. இந்த நடைமுறை எதுவுமே, வெங்கடராமன் நியமனத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதுதான் சர்ச்சையாகியிருக்கிறது.

'பொறுப்பு சட்டம்-ஒழுங்கு டி.ஜி.பி நியமனத்தை எதிர்த்து' வழக்கு தொடர்ந்திருக்கும், மக்கள் கண்காணிப்பகத்தின் இயக்குநர் ஹென்றி டிபேனிடம் பேசினோம். "சட்டம்-ஒழுங்கு டி.ஜி.பி-யாக பணியாற்றிய சங்கர் ஜிவால், ஆகஸ்ட் 31-ம் தேதி ஓய்வுபெற்றார். அவர் ஓய்வுபெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே, தகுதியுள்ள சீனியர் டி.ஜி.பி-க்களின் பட்டியலை யூ.பி.எஸ்.சி-க்கு மாநில அரசு அனுப்பியிருக்க வேண்டும். ஆனால், ஆகஸ்ட் மாத இறுதியில்தான் அந்தப் பட்டியலை தமிழக அரசு அனுப்பி வைத்திருக்கிறது. அதனால்தான் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்திருக்கிறேன். விரைவில் வரவிருக்கும் இந்த வழக்கில், பொறுப்பு டி.ஜி.பி நியமனத்துக்கு இடைக்காலத் தடை கேட்கவிருக்கிறோம்" என்றார்.

நம்மிடம் பேசிய சீனியர் காவல்துறை அதிகாரிகள் சிலர், "தமிழக காவல்துறையில் பணியாற்றும் ஒரு சிலரின் சுயலாபத்துக்காக, பொறுப்பு டி.ஜி.பி-யை நியமித்து தமிழக அரசுக்குச் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தற்போது சீனியர் டி.ஜி.பி-க்கள் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் சீமா அகர்வாலுக்கு, இன்னும் எட்டு மாதங்கள் பணிக்காலம் இருக்கிறது. காவல்துறை படைத் தலைவராக நியமிக்கப்பட, ஆறு மாதம் பணிக்காலம் இருக்க வேண்டும். யூ.பி.எஸ்.சி-க்குப் பரிந்துரைப் பட்டியல் அனுப்பப்பட்டிருந்தாலும், அதற்கு ஒப்புதல் வழங்குவதிலிருந்துதான் பணிக்காலக் கணக்கை எடுத்துக்கொள்ள முடியும். யூ.பி.எஸ்.சி-க்கு அனுப்பப்பட்ட பட்டியல், தமிழகத்துக்கு வந்து சேர தாமதமானால், சீமா அகர்வாலுக்கான வாய்ப்பு பறிபோகும்.



● சந்தீப் ராய் ரத்தோர்



● சீமா அகர்வால்

தி.மு.க ஆட்சிப் பொறுப்பேற்றதும், ஆவடி, சென்னை மாநகர போலீஸ் கமிஷனர் பதவிகளுக்கு வந்தவர் சீனியர் டி.ஜி.பி-யான சந்தீப் ராய் ரத்தோர். முதல் மூன்று சீனியாரிட்டியில் அவர் இருப்பதால், சட்டம்-ஒழுங்கு டி.ஜி.பி ரேஸிலும் இருந்தார். அதற்கு 'செக்' வைப்பதுபோலத்தான், அவரைவிட ஜூனியரான வெங்கடராமனை பொறுப்பு சட்டம்-ஒழுங்கு டி.ஜி.பி-யாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அரசியலின் பின்னால், ஏ.டி.ஜி.பி அந்தஸ்திலான சில அதிகாரிகளின் ஆட்டம் இருக்கிறது. முதல்வர் அலுவலகத்தையே குழப்பி, தவறான வழிகாட்டுதலை அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஏ.டி.ஜி.பி-யாக இருக்கும் சிலர், அடுத்த ஆண்டு டி.ஜி.பி-யாக பதவி உயர்வு பெறவிருக்கின்றனர். அவர்களில் ஒருவர், சிறப்பு டி.ஜி.பி என்கிற அந்தஸ்தில் தமிழக காவல்துறையைத் தன்னுடைய முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவரத் திட்டமிட்டிருக்கிறார். அதற்காகத்தான், இவ்வளவு அரசியலும் நடக்கிறது" என்றனர்.

"பொறுப்பு சட்டம்-ஒழுங்கு டி.ஜி.பி-யை நியமிக்கக் கூடாது என்று சட்டம் எதுவும் இல்லை. மூன்று பேரின் பெயர்களை யூ.பி.எஸ்.சி அனுப்பிவைத்ததும், அதிலிருந்து ஒருவர் சட்டம்-ஒழுங்கு டி.ஜி.பி-யாகத் தேர்வுசெய்யப்படுவார். அப்போது இந்தச் சர்ச்சையெல்லாம் ஓய்ந்துவிடும்..." என்கிறார்கள் உள்துறையில் பணிபுரிபவர்கள்.

எது எப்படியோ, எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியில் தொடங்கி, பல அரசியல் தலைவர்களும், பொறுப்பு சட்டம் - ஒழுங்கு டி.ஜி.பி நியமனத்துக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறார்கள். ஒருவேளை, இதில் அதிகாரிகளின் உள்ளடி அரசியல் இருந்தால், ஆட்சி மேலிடம் தலையிட்டு அதைக் களைய வேண்டும். ஏற்கெனவே, சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டுவிட்டதாக எதிர்க்கட்சிகள் போர்க்குரல் எழுப்புகின்றன. இந்தச் சூழலில், நிர்வாகப் பிரிவுடன் சட்டம்-ஒழுங்கு பொறுப்பையும் சேர்த்து வெங்கடராமனால் எப்படி கவனிக்க முடியும்... தலைக்கு மேல் தேர்தலை வைத்துக்கொண்டு, ஆட்சி மேலிடம் கவனக்குறைவாக இருப்பது சரியல்ல!